செ.வெ.எண்: 68 நாள்: 25.09.2021

**நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வேதாரண்யம் வட்டம் ஆர்க்காட்டுத்துறை மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க சென்றபோது அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் ஆர்க்காட்டுத்துறை மீனவர் காலணியைச் சேர்ந்த சிவகுமார், சிவா, சின்னதம்பி ஆகிய மூவரும் வேதாரண்யத்திலிருந்து கிழக்கே 15 நாட்டிகள் தூரத்தில் படகில் மீன்பிடித்து கொண்டிருக்கும்போது அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு காயமடைந்த மீனவர்களை வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டு அதனை தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வரும் தகவல் அறிந்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் மீனவர்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**